ஆவியானவரே
அன்பின் ஆவியானவரே
இப்போ வாரும்
இறங்கி வாரும்
எங்கள் மத்தியிலே

உளையான சேற்றினின்று
தூக்கி எடுத்தவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும்
இந்த வேளையிலே-

சீனாய் மலையினிலே
இறங்கி வந்தவரே
ஆத்ம தாகம் தீர்க்க வாரும்
இந்த வேளையிலே

ஆவியின் வரங்களினால்
என்னையும் நிரப்பிடுமே
எழுந்து ஜொலிக்க
எண்ணை ஊற்றும்
இந்த வேளையிலே-